பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

The EELA NADU

மலர் 19 ஆடி 18 ஷஃபா 16 இதழ் 172

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 2-8-77

## நாளை முதல் ஜவுளி விலை குறையும்?

கொழும்பு, நாளை புதன்கிழமையில் இருந்து ஜவுளிகளின் விலைகள் குறையும் என்று ஜவுளிக் கைத்தொழில் அமைச்சர் திரு. விஜயபாலமெண்டிஸ் உறுதியளித்துள்ளார்.

ஜவுளிவிலை குறைப்பு பற்றி புதன்கிழமை அறிவிக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

தற்போது மிகக்குறைந்த அளவி உற்பத்தி செய்து வரும் பல்வேறு ஜவுளி ஆலைகளும் இன்னும் ஒருமாத காலத்துக்குள் முழு அளவிலான உற்பத்தியை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மூலப்பொருள் உற்பத்தி பற்றுக்குறையே இவ்வுற்பத்தி வீழ்ச்சிக்குக் காரணமென அமைச்சர் சுட்டிக்காட்டினர். ஜவுளி விலை குறைப்புத் தொடர்பாக தாம் அரசாங்க தனியார் துறை ஜவுளி உற்பத்தி நிறுவன அதிகாரிகளுடன் ஏற்கனவே பேச்சு வார்த்தைகள் நடத்தியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் சொன்னர் (உ)

# 'பேரவை எமக்கு ஒரு மேடையே'!

## கதிரவேலுப்பிள்ளை தகவல்

**யாழ்ப்பாணம், செவ். 'தனிநாட்டுக் கோரிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணி கைவிடவில்லை. இதற்கு முதல் படியாக தேசிய சபை ஒன்றை நிறுவி அச்சபையில் தமிழ ஈழம் அமைப்பதற்கான அரசியல் சட்டத்தை தயாரிப்போம்.'**

தமிழர் விடுதலைகூட்டணி முக்கிய பிரமுகரும் கோப்பாய் எம் பியுமான திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. கதிரவேலுப்பிள்ளை மேலும் கூறியதாவது;

தமிழ் மக்கள் பிரச்னையிட்டு புதிய அரசாங்கம் என்ன நடவடிக்கைளெடுக்கப் போகிறதென கவனமாக அவதானிப்போம். ஏனென்றால் அவர் மிகமுக்கிய பிரசனையான தமிழர் பிரச்னையைத் தீர்த்துவைக்கப் போவதாக அறிவித்திருந்தார்.

பொதுத்தேர்தலுக்கு முன்னர் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் சுதந்திரக்கட்சி, ஐக்கியதேசியக்கட்சி, இடதுசாரி ஐக்கிய முன்னணி ஆகியவற்றுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது. இப்பேச்சுவார்த்தையின்போது மூன்று கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் இப்பிரச்னைக்கு தீர்வுகாண வேண்டும் என்பதில் அக்கறை கொண்டிருந்தனர்.

தேசிய அரசுப் பேரவையைக் கூட்டணியின் 17 எம். பி.க்களும் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தும் ஒரு மேடையாகவே பாவிப்பார்களேயன்றி வேறெதற்கும் பாவிக்கமாட்டார்கள்.

## "ஐந்து மாத அவகாசம் தாருங்கள்"

யாழ்ப்பாணம், செவ்.

தமிழ்ஈழக் கோரிக்கை தொடர்பான விஷயங்களுக்கு, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் இளைஞர்களிடம் 5 மாத கால அவகாசம் கேட்டுள்ளது. இதேசமயம் 5000 இளைஞர் கொண்ட அகிம்சைப் படை ஒன்றைத் தொகுதி ரீதியாக அமைக்க கூட்டணி நடவடிக்கை எடுத்துள்ளது.

வல்வெட்டித்துறையில் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணி வரவேற்புக் கூட்டத்தில் தமிழ் ஈழப் போராட்டம்பற்றி தமிழ் இளைஞர்கள், கூட்டணி செயல்அதிபர்திரு. ஏ. அமிர்தலிங்கத்திடம் கேட்டார்கள். இதற்குப் பதிலளித்த திரு. அமிர்தலிங்கம் 5 மாத கால அவகாசம் தருமாறு அவர்களிடம் கோரினர்.

இந்த 5 மாத காலத்தில் தொகுதி ரீதியாக 5000 இளைஞர்கள் திரட்டப்படுவார்களெனத் தெரியவருகிறது. இந்த 5000 இளைஞர்களும் அகிம்சை முறையில் 'தமிழ் ஈழம் பெறுவோம்' என்று ஒரு உறுதிமொழி அளிக்கவேண்டும் எனவும் கூறப்படுகிறது.

......

## 3-வது டெஸ்ட் இங்கிலாந்து வெற்றிபெறலாம்?

லண்டன், ஆக 1

இங்கிலாந்துக்கும், ஆஸ்திரேலியாவுக்குமிடையில் நோட்டிங்ஹாமில் நடைபெறும் 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 4-வது நாளான இன்றுஆட்டமுடிவில் ஆஸ்திரேலியாக் கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் 309 ஓட்டங்களைப் பெற்றது.

மாக்கோஷ்கர் 107 ஓட்டங்களைப் பெற்றுர்.

இங்கிலாந்து கோஷ்டி இப்போட்டியில் வெற்றிபெற 189 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் தனது 2-வது இன்னிங்ஸை ஆட ஆரம்பித்து ஆட்ட இறுதியில் விக்கெட் நஷ்டமின்றி 17 ஓட்டங்களைப் பெற்றது.

ஸ்கோர் விபரம்: ஆஸ்திரேலியா: 243, 309. இங்கிலாந்து: 364, 17—0

## "அண்ணா" பத்திரிகைக்கு சபாநாயகர் எச்சரிக்கை!

சென்னை, ஆக. 1

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உத்தியோக பூர்வமான தினசரிப் பத்திரிகையான 'அண்ணா' இன்று தமிழகசட்டசபையில் சபாநாயகரின் கடுமையான எச்சரிக்கைக்குள்ளானது!

தமிழக சட்டசபைக் கூட்டத்தில் தி. மு. கழக உறுப்பினர்களான திரு. க அன்பழகன், திரு. சாதிக்பாட்சா ஆகியோர் ஆற்றிய உரைகளைத் திரித்தும், மாறுபட்டும் 'அண்ணா' பத்திரிகை செய்திகளை வெளியிட்டிருந்தது என்று குற்றம் சாட்டப்பட்டு இவ்விரு உறுப்பினர்களும் இன்று சட்டசபையில் உரிமைப் பிரச்னையைக் கிளப்பினர். 'நாங்கள் இங்கு தெரிவிக்காததையெல்லாம் 'அண்ணா' ஏடு வெளியிட்டிருக்கிறது இச்செயல் சபையின் உரிமையை மீறியதாகும்' என்று திரு. க. அன்பழகன் கூறினர்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர் திரு. முனு ஆதி 'தவறுக்கு வருந்துவதாக 'அண்ணா' ஒருசெய்தி வெளியிட்டிருக்கிறது ஆனாலும் இச்செயல் வரவேற்கக் கூடியதல்ல சபையில் அங்கத்தவர்கள் கூறுவதை பத்திரிகைகள் வெளியிடுவது பண்பல்ல. 'அண்ணா' பத்திரிகையை நான் கடுமையாக எச்சரிக்கின்றேன் என்று இன்றைய சட்டசபைக்கூட்டத்தில் தெரிவித்தார்.

'அண்ணா' பத்திரிகையின் ஆசிரியர், தமிழக முதல்வர் திரு. எம். ஜி இராமச்சந்திரன்,

## ரூ. 4 லட்சம் செலவில் மீன்பிடித் தொழிற்சாலை

### நெடுந்தீவில் அமைக்கத் திட்டம்

வேலணை, திங்கள்

நெடுந்தீவில் நான்கு லட்சம் ரூபாய் செலவில் மீன்பிடித் தொழிற்சாலை ஒன்றை அமைக்க ஊர்காவற்றுறைத் தொகுதி அபிவிருத்திச் சபை திட்டமிட்டுச் சம்பந்தப்பட்ட அமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்பியுள்ளதாம்.

இந்த மீன்பிடித் திட்டம் திட்டமிடல் பொருளாதார அமைச்சினல் அங்கீகரிக்கப்பட்டால் இத்தீவில் இருக்கும் பல இளைஞர்கள் வேலைவாய்ப்புப்பெறக் கூடியகாயிருக்கும் என்று ஊர்காவற்றுறைத் தொகுதிஅபிவிருத்தி சபையின் செயலாளர் திரு. த. சிதம்பரநாதன் தெரிவித்தார். (அ)

## சூரியரின் மகளுக்கு விற்கப்பட்ட காணி

கொழும்பு, திங்கள்

முன்னள் - தபால், வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு. செ. குமாரசூரியரின் புதல்வியான செல்வி சகுந்தலாவிற்குப் பம்பலப்பிட்டிப்பகுதியில் விற்பனை செய்யப்பட்ட காணி விற்பனை ரத்து செய்யப்பட்டுள்ளது.

இக்காணி விற்பனை பற்றிப் பூரண விசாரணை நடாத்திகூடிய விரைவில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர்

(6-ம் பக்கம் பார்க்க)

## எம். பிக்களைச் சந்திக்க 15 அறைகள் ஒதுக்கீடு

கொழும்பு, திங்கள்

பொதுமக்கள் இனிமேல் கொழும்பு லோட்டஸ்வீதியில் உள்ள மண்டபத்திலேயே தமது தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களைச்சந்திக்கலாம்.

இதற்காக லோட்டஸ் வீதியில் உள்ள கட்டடம் ஒன்றில் 15 அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன ஒருசிற்றுண்டிச்சாலையும் இங்கு அமைக்கப்படும்.

தேசியஅரசுப் பேரவைக்குள் எம் பிக்களை பொதுமக்கள் எவரும் சந்திக்க அனுமதிக்கப் படமாட்டார்கள். (ம-இ)

## பூமியில் விழுந்த விண்வெளிக் கல்!

லண்டன், ஆக. 1

பெரிய அளவிலான விண்வெளிக் கல் ஒன்று மலகாஸி குடியரசில் விழுந்துள்ளது!

மின்னல் வேகத்தில் பூமியை நோக்கி வந்துகொண்டிருந்த இந்தக்கல், பூமியிலிருந்து அறுபது மைல் தூரத்தில் வந்து கொண்டிருந்தபோது இரண்டாக பிளவு பட்டது என்றும், அதில் ஒருபகுதி நிலத்தில் விழுந்து பலஅடி ஆழத்தில் புதையுண்டது என்றும் அறிவிக்கப்பட்டது.

# முன்னாள் சபாநாயகர் கைதாகி பிணையில்விடுதலை

## ஒருவரை இரும்புக்கம்பியால் தாக்கினராம்

கொழும்பு, திங்கள்

தாக்குதல் சம்பவம் ஒன்று தொடர்பாக முன்னாள் தேசிய அரசு பேரவை சபாநாயகர் திரு. ஸ்டான்லி திலகரத்னவும் அவரது செயலாளரும் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொதுத்தேர்தல் நடைபெற்ற தினத்தன்று இரவு ஜெயதிஸ சில்வா என்பவர் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்ட சம்பவம்தொடர்பாகவே இவர்கள் சந்தேகத்தின் பேரில் மிரிஹான பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர்.

காயமடைந்தவர் களுபோவில ஆஸ்பத்திரிக்கு விரையப்பட்டு,பின் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டது. இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக ராகுல என்பவரும் தேடப்பட்டுவருகிறார். (ம-உ)

## மணிவாக்கு

ஒரு மனிதனுடைய மனமாட்சியை மனிதர் சஞ்சரிக்கும் உலகிற் பரிசோதிக்கலாமன்றிச் சஞ்சாரமில்லாத இமயமலைச் சிகரங்களிலல்ல

—காந்திமகான்

ஈழநாடு
THE EELANAADU

## அவகாசம்!

திரு ஜே ஆர் ஜயவர்த்தனவை தலைவராகக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி புதிய கொள்கைத் திட்டங்களுடன், புதுப் பொலிவுடன் நாட்டு மக்களின் பேராதரவைப் பெற்று ஆட்சிபீடத்துக்கு வந்துள்ளது.

நீண்டகால அரசியல் அனுபவமும் ஆற்றலும் நிறைந்தவர் திரு ஜே ஆர். என்பதை அவரது அரசியல் எதிரிகள்கூட ஒப்புக்கொள்வார்கள். அதிகம் பேசாமல் அளந்துபேசும் அரசியல் தலைவர்களுள் ஜே. ஆரும் ஒருவர் என்பதையும் நாடு நன்கறியும்.

எந்தப் பிரச்னைக்கும் நல்ல தீர்வுகாணக்கூடிய வல்லமை பொருந்திய ஜே. ஆருக்கு இப்போதுதான் நாட்டை நிர்வகிக்கும் சந்தர்ப்பம்கிடைத்திருக்கிறது.

தமக்குத் தலைமைப் பதவி கிடைத்ததும் எப்படித் தமது கட்சியில் களையெடுப்புச்செய்து அதைத் தூய்மைப்படுத்தினாரோ, அதேபோல் நாட்டின் நிர்வாகத்திலுள்ள ஊழல்களைக் களைந்து சீராக்குவாரென்ற நம்பிக்கையை அவரி பேரவை உறுப்பினர்கள், அமைச்சர்கள், உயர் அரசாங்க அதிகாரிகள் ஆகியோர் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்கநெறிக் கோவை ஏற்படுத்தியிருக்கிறது

நாட்டின் சகல பிரச்னைகளையும் நன்கு அறிந்துள்ளவரான திரு. ஜே ஆர் இந்நாட்டிலுள்ள சிறுபான்மையினரின் பிரச்னைகளையும் நன்கு உணர்ந்திருப்பார் என்று எதிர்பார்ப்பதில் தவறில்லை.

உலக நாடுகள் பலவற்றிலும் சிறுபான்மையினர் பிரச்னைகள் எப்படியிருக்கின்றன; எப்படி இருந்தன; அவற்றுக்கு எந்தெந்த முறையில் அந்தந்த நாடுகளில் தீர்வுகாணப்பட்டிருக்கின்றன என்பதையும் அவர் அறியாமலிருக்க முடியாது.

எனவே தமிழ்பேசும் மக்களின் பிரச்னைகளுக்கும் அவர் நியாயமான ஒரு தீர்வுகாண முயற்சிசெய்வாரென்று நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

இதேசமயம் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தமிழ்பேசும் மக்கள் தமது நிலையை எப்படி எடுத்துக் காட்டியுள்ளனர் என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியமாகும்.

'தமிழ் ஈழம்' அமைப்பதற்கு இந்தப் பொதுத்தேர்தலை ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகக் கணித்துப் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வடக்கு மாகாணத்தில் பேராதரவு கிடைத்தாலும் கிழக்கு மாகாணத்தில் அத்தகைய ஆதரவு கிடைக்கவில்லை.

புத்தளம் உட்படக் கிழக்கிலும் மற்றும் பகுதியிலுமுள்ள தமிழ்பேசும் சமூகத்தின் ஒரு பிரிவினராகிய இஸ்லாமிய மக்கள் 'தமிழ் ஈழம்' என்ற கோரிக்கைக்கு ஆதரவளிக்கவில்லை என்ற உண்மையையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

எனவே 'தமிழ் ஈழம்' உடனே கிடைத்துவிடும் என்ற மாயத்திரையை மக்கள் மனத்திலிருந்து குறிப்பாக இளைஞர் மத்தியிலிருந்து நீக்கவேண்டிய பொறுப்பும் கடமையும் தமிழ்த் தலைவர்களில்தான் தங்கியிருக்கிறது.

தமிழ்ஈழம் கிடைக்கமுடியாத ஒன்றல்ல; எப்போதாவது அது கிடைக்கலாம். ஆனால் அது தேர்தல் மூலம் கிடைக்காதென்பதையும் அவசரப்பட்டு ஆவேசப்பட்டு எதையும் திடீரெனச் சாதிக்க முடியாதென்பதையும் அறிவுறுத்தவேண்டும்.

இதேசமயம்படிப்படியாகச் சிலவற்றைப் பெற்றுத் தியாகங்கள் பல புரிந்துதான் இலட்சியத்தை அடைய முடியுமென்பதையும் உணர்த்தவேண்டியதும் அவசியமாகும்.

வல்வெட்டித்துறையில் நடந்த கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயல் அதிபர்களில் ஒருவரும் எதிர்க்கட்சித் தலைவராக விளங்கப்போகின்றவருமான திரு. அமிர்தலிங்கம் தமிழ்ஈழக் கோரிக்கை சமபந்தமான விடயங்களுக்கு இளைஞர்களிடம் ஐந்துமாதகால அவகாசம் கோரியதாக ஒரு செய்தி கூறுகிறது.

ஐந்துமாதகாலமல்ல ஒரு வருட அவகாசம் கொடுத்துப்பார்ப்பதும் தவருகாது.

## சொற்பொழிவும் பண்ணிசையும்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் திவ்வியஜீவன சங்கம் நடாத்தும், 4வது நாள் குருபூர்ணிமா விழாவில் செல்வி பரமேஸ்வரி சின்னத்துரையின் சொற்பொழிவும், செல்வி ஜெயதேவி நவரெத்தினத்தின் பண்ணிசையும் சிறப்பு நிகழ்ச்சியாக இன்று இடம் பெறவுள்ளன. (கே-உ)

## பேரவையின் முதலாம்நாள் நிகழ்ச்சிபற்றி..

யாழ்ப்பாணம், செவ்

தேசிய அரசுப் பேரவையின் முதலாம்நாள் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கு முன்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி தேசியப் பேரவை உறுப்பினர்கள், கொழும்பில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தலைமைப் பீடத்தால் பணிக்கப்பட்ட கடிதங்கள் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணி இ. தொ. கா (அரசியற்பிரிவு) தேசிய பேரவை உறுப்பினர்கள் தேசியப்பேரவையில் நடந்து கொள்ளும் முறை பற்றி இறுதியாக முடிவெடுக்க விருப்பதால் உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்வது அவசியமென இக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி கூட்டம் கொழும்பில் இம்மாதம் 3ம் திகதி இரவு நடைபெறும். (கே-உ)

## செல்வா நினைவாலயம்

யாழ்ப்பாணம், செவ்

செல்வா நினைவாலயத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவுக்கு தமிழகத்திலிருந்து எவரையும் அழைப்பது பற்றி செல்வா நினைவாலய அறங்காவல் குழு முடிவு எதுவும் செய்யவில்லை என்று மேற்படி அறங்காவல் குழுவின் செயலாளர்தெரிவித்துள்ளார்.

அடிக்கல்லை யார் நாட்டுவார் என்பது பற்றியும் முடிவு செய்யப்படவில்லை என்றும் அவர் கூறினார்

## ஒரு புதிய ஜே. ஆர்.

மாண்பு மிகு ஜே ஆர். ஜயவர்த்தன அவர்கள்,
பிரதம மந்திரி, இலங்கை.

அன்புள்ள பிரதமரே!

வணக்கம். தலதா மாளிகை எண்கோண மண்டபத்திலிருந்து தாங்கள் பேசியதைக் கேட்டேன். அரிசி, மாவு, சீனி, ஜவுளிவிலைகளைக் குறைப்போமென்றும் ஓரிரு வாரங்களில் நிவாரணம் தருவோம் என்றும் உறுதி கூறியது பொதுமக்களுக்கு மகிழ்ச்சி அளித்துள்ளது.

அதுமட்டுமல்ல, சங்கக்கடைகளிலிருந்து மக்களை விடுதலை செய்வதாகவும், இஷ்டமான கடைகளில் சாமான்களை வாங்கிக்கொள்ளலாமென்றும் தனிப்பட்ட வர்த்தகர்கள் சரக்குகளை இறக்குமதி செய்யலாமென்றும் தெரிவித்தது மற்றொரு நல்ல செய்தியாகும்.

தாங்கள் எந்தக் கட்சியின் பிரதமருமல்லவென்றும், மக்கள் அனைவருக்குமே பிரதமரென்றும் அறிவித்தது தங்களது விரிந்த மனப்பான்மையைக் காட்டுவதுடன், புதிய நம்பிக்கையும் அளிப்பதாக இருக்கின்றது.

கடந்த காலத்தில் எமது மக்கள் இழந்த அத்தனை உரிமைகளையும் பெற்றுத்தருவதே தங்கள் நோக்கம் என்று அறிவித்துள்ளது அந்த நம்பிக்கை மேலும் அதிகரிப்பதாக இருக்கிறது

இலங்கை அரசியலில் தாங்கள் அறியாதது ஒன்றுமில்லை. சிறப்பாகத் தமிழரின் குறை என்ன என்பது தங்களுக்குத் தெரியும். ஐக்கியதேசியக் கட்சி அமைக்கப்பட்டபோது நாட்டில் சிங்களமும்—தமிழும் சரிசமமாக அரசாங்க மொழிகளாக இருந்துவந்தன. களனி மகாநாட்டில் அதைமாற்றியபின், ஐக்கியமும் இல்லை தேசீயமும் இல்லை, நாடு முன்னேற முடியாமல் சீரழிகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஐ. தே. கட்சிக்கு வேறுகருத்து வேற்றுமைகள் என்ன இருப்பினும் தமிழரின் உரிமைகளைப் பறிப்பதில், இரண்டும் ஒன்றுபட்டன. தமிழருக்கு ஜனநாயகத்திலேயே நம்பிக்கை இல்லாமல் போயிற்று, அவர்கள் மனமுடைந்துள்ளது.

தவறுகள் செய்வது மனித சுபாவம். அதிலும் பல நூற்றாண்டுகள் அடிமைப்பட்டிருந்து, புதிதாக விடுதலை அடைந்தபோது, இவ்வித தவறுகள் நடந்துவிட்டதில் வியப்பில்லை.

கடந்த காலத்தில் மக்கள் இழந்த அத்தனை உரிமைகளையும் பெற்றுத்தருவதே தங்கள் நோக்கம் என்று தாங்கள் முதல் பேச்சிலேயே பகிரங்கமாக அறிவித்துள்ளீர்கள். தமிழரின் உயிர் போன்ற உரிமைகளை மீண்டும் பெற்று தமிழர், இந்நாட்டில் மானத்துடன், சரிநிகர் சமானமாக வாழ வழிச்செய்வீர்களா?

தங்கள் பேச்சு ஓர் வகுப்புவாத அரசியல் வாதியைப் போல இல்லாமல், அரசியல் ஞானி பேசுவது போலுள்ளது. ஒரு புதிய ஜயவர்த்தன வந்துள்ளதாகவே தோன்றுகிறது.

அமோகமான வெற்றிபெற்றுள்ள தங்களின் மேலான தலைமையினுல், மீண்டும் இலங்கையில் தேசிய ஒற்றுமையும் சுபீட்சமும் ஏற்பட தங்கள் ஆட்சி வழிசெய்யுமா? நாட்டின் தலைவிதி மாறுமா?

இப்படிக்கு,
''முருகன்''

### உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள்:

# கூட்டணி நடவடிக்கைக்குழு முல்லைத்தீவில் கூடுகிறது

யாழ்ப்பாணம், செவ்.

தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வேட்பாளர்களை நிறுத்துவது தொடர்பாக ஆராயவிருக்கிறது.

கூட்டணியின் நடவடிக்கைக் குழு இதன்பொருட்டு இம்மாதம் 20ம் திகதி முல்லைத்தீவில் கூடவிருக்கிறது.

நடவடிக்கைக் குழுவின் தீர்மானம் இத்தேர்தல்களில் இளைஞர்களை அதிலும் விடுதலை வேட்கைமிக்கவர்களை வேட்பாளர்களாக நிறுத்தும்வகையிலேயே அமையும் எனக் கூறப்படுகிறது. இளைஞர்கள் பலர் இத்தேர்தல்களில் போட்டியிட தமிழர் விடுதலைக் கூட்டணி மேலிடத்திடம் விண்ணப்பித்துள்ளதாகவும் அறியப்படுகிறது. (கே-உ)

## தனியார் கடைகளுக்கு கூப்பனை மாற்றலாம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

பாவனையாளர்கள் விரும்பினுல் தங்கள் பங்கீட்டு அரிசிப் புத்தகங்களை, பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து, உத்தரவுபெற்ற வியாபாரிகள் கடைகளுக்கு மாற்றலாம்.

இத்தகவலை உதவி கூட்டுறவு ஆணையாளர் திரு எஸ். நாகலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

பாவனையாளர்கள் விரைவாகவும் சஷ்டமில்லாமலும், நீண்ட நேரம் கியூவில் நிற்காமலும் தங்கள் பங்கீட்டுப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்காகவேஇந்த வசதிசெய்யப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்க காலத்தின் போது, பங்கீட்டு அரிசி புத்தகங்களை ப. நோ. கூ. சங்கங்களிலிருந்து, உத்தரவுபெற்ற வியாபாரிகள் கடைக்கு மாற்றுவது தடைசெய்யப்பட்டிருந்தது.

இனிமேல் ப நோ. கூ. சங்கங்களில் கிடைக்கும் சகல பங்கீட்டுப் பொருட்களும் உத்தரவுபெற்ற வியாபாரிகள் கடைகளிலும் கிடைக்கும். டுறவு அதிகாரிகள் உத்தரவு பெற்ற கடைகளை மேற்பார்வைசெய்வார்கள்.

அவசியம் ஏற்படில் உத்தரவு பெற்ற வியாபாரிகள் இல்லாத இடங்களுக்கு புதியவர்கள் நியமிக்கப்படுவார்கள். (க)

## தேர்தல் வன்செயல்கள்: 11 பேருக்குப் பிணை மறுப்பு

நுவரெலியா, திங்கள்

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலை ஒட்டிய வன்செயல்கள் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட 11 சந்தேக நபர்களையும் பிணையில் செல்ல அனுமதி மறுத்த நுவரெலியா நீதிபதி சந்தேக நபர்களை இம்மாதம் 8-ம்திகதி வரை றிமாண்டில்வைக்குமாறு உத்தரவிட்டார்.

சாந்திபுர குடியேற்றப்பகுதி நுவரெலியா ஆகிய இடங்களில் நடைபெற்ற வன்செயல்கள் தொடர்பாகவே, இவர்கள் கைதாகியிருந்தனர்.

இரு அரசியல் கட்சி ஆதரவாளர்களுக்கு இடையே நடைபெற்ற இம்மோதல்களில் பலர் காலிமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுள்ளதுடன் இவர்களது உடைமைகளும் சேதத்திற்குள்ளாகின என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## கள்ளக்கடத்தல்: தடுப்பதில் சில சங்கடங்களாம்

கொழும்பு, திங்கள்

இலங்கையின் கரையோரப் பகுதிகளில் கள்ளக் கடத்தல் முயற்சிகளை முறியடிப்பதில் தடங்கல் உள்ளன எனச் சுங்க இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர், இதுபற்றிக் குறிப்பிடுகையில் திருகோணமலையில் சுங்கப் பகுதியினரிடம் உள்ள ரோந்து சுற்றுவதற்காகப் பயன்படும் படகு, 2 வருட காலமாகத் திருத்தப்படாத நிலையிலுள்ளது. இதே மாதிரிப் பல இடங்களிலும் இதே நிலைமையுள்ளதால் கள்ளக்கடத்தலைக் கரையோரப் பகுதிகளில் உடன் முறியடிப்பதற்கு முடிவதில்லை. போதியளவு ரோந்து சுற்றும் படகுகள் சுங்கப் பகுதியிடம் இருக்குமாயின் சுலபமாக முறியடிக்க முடியும் என்றார்.

# அரசியல் நோக்குடனேயே

## புலவர் கோவிந்தன் கைதானர்

### தி. மு. க. வழக்கறிஞர் அறிக்கை

சென்னை, ஆக. 1

தமிழ்நாடு சட்டசபையின் முன்னாள் சபாநாயகரும், தற்போதைய உறுப்பினருமான புலவர் கோவிந்தன் கைதுசெய்யப்பட்டது அரசியல் நோக்கத்துடன் ஜோடிக்கப்பட்ட வழக்கு என தி. மு. க. வழக்கறிஞர் திரு. நா. கணபதி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இக்குற்றமானவர்களுக்கென 70ம் ஆண்டு நிறுவப்பட்ட "அண்ணா அருளகம்" நிதியில் மோசடி செய்ததாக புலவர் கோவிந்தன் மீது கிரிமினல் வழக்கு தாக்கல்செய்யப்பட்டிருந்ததும்இதைவிசாரித்த கமிஷன், அவரைகடந்தமாதம் 27ந் திகதி கைது செய்திருந்ததும் தெரிந்ததே.

அண்ணா அருளக நிறுவன, தலைமைப்பதவியை ஏற்ற புலவர் கோவிந்தன் தனது நிர்வாகத்தின் திறமையால் அருளகத்திற்கு நிரந்தர வாடகையாக மாதாமாதம் ரூபா 700 பெற்றுக்கொடுத்தார். இம் மாதிரியாக நிர்வாகத்தில் பெரும்சேவையாற்றிய புலவர் கோவிந்தன் சிரணி இயக்கம் நன்கொடையாக வழங்கிய 15,000 ரூபாவை மோசடி செய்துவிட்டாரென பொய் வழக்கு ஜோடித்தது அரசியல் நோக்கமேயன்றி வேறொன்றுமில்லையென்றும் திரு. கணபதி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (கெ-இ)

# பூட்டோ மீது கொலைக்குற்றம்

இஸ்லாமாபாத், ஆக. 1

முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் ஜுனப் சுல்பிகார் அலி பூட்டோ மீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் எம். பி. ஒருவரின் தந்தையின் கொலை தொடர்பாகவே ஜனப் பூட்டோ மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஜனப் பூட்டோ மீதும் வேறு 3 அரசாங்கஅதிகாரிகளின் மீதுமே இக்கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

# "நாட்டின் நலன்கருதி ஒன்றுபட்டு செயலாற்றுக"

## ஜனதா அரசிடம் ஜெயப்பிரகாஷரின் தேசிய மக்கள் கமிட்டி கோரிக்கை

புதுடில்லி, ஆக. 1

"ஜனதாகட்சி அரசாங்கம் இந்திய நாட்டின் நலன் கருதி ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும்"

திரு. ஜெயப்பிரகாஷ்நாராயண் தலைமையில் அண்மையில் அமைக்கப்பட்ட விசேட தேசிய மக்கள் கமிட்டியே இவ் வேண்டுகோளை விடுத்துள்ளது.

இக்கமிட்டியின் இரண்டு நாள் கூட்டம் பட்னாவில் நடைபெற்ற போதே அரசிடம் இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பணியாகக் கருதி ஜனதா கட்சியினர் ஒன்றுபட்டு இயங்கவேண்டும் என்றும் இக்கமிட்டி கோரியுள்ளது.

விலைவாசி உயர்வு, வேலையில்லாப் பிரச்னை, லஞ்சஊழல் ஆகியனநாட்டில் நிலைகொண்டிருப்பதையும் இக்கமிட்டி பலமாகக் கண்டித்து கவலைதெரித்தது.

பொருளாதாரக் குற்றம் இழைத்தவர்கள் மீது மீண்டும் மிசா சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதையும் இக்கமிட்டி கண்டனம் தெரிவித்துள்ளது.

### அரசியல் கைதிகளை விடுவிக்க கோரிக்கை

சகல அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுவிக்கும்படியும் இக்கமிட்டி அரசைக்கேட்டுள்ளது. (இ)

## அணுஆலை அமைப்பதை எதிர்த்து பிரான்சில் ஆர்ப்பாட்டம்

லண்டன், ஆக. 1

பிரான்ஸில் அணுசக்தி உற்பத்தி நிலையம் அமைக்கப்படுவதை எதிர்த்து நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஒருவர் கொலைசெய்யப்பட்டதாகவும், 20 பேர் படுகாயம் அடைந்ததாகவும் அறிவிக்கப்படுகின்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, பெல்ஜியம் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களென்றும் இவர்களில் பெண்களே கூடுதலானவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அணுசக்தி உற்பத்தி நிலையததிலிருந்து சுமார் 10 மைல் தூரத்திற்கப்பால் பொலிஸாரினால் தடுத்து நிறுத்தப்பட்டனரென்றும், இவர்கள் தடையை மீற முற்பட்டபோது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

இந்த மோதலில் 20 பேர் படுகாயமடைந்தனர். (இ)

......

## அரசியலுக்கு திரும்பினர் இந்திரா

புதுடில்லி, ஆக. 1

முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி மீண்டும் அரசியலுக்குத் திரும்பிவிட்டார்.

தமது தொகுதியில் தோல்வியடைந்தபின் முதல்தடவையாக திருமதி காந்தி சமீபத்தில் மஹாராஷ்டிராவில் காங்கிரஸ் ஊழியர்கள் மத்தியில் பேசினர்.

அவர் விரைவில் பஞ்சாப் மாநிலத்துக்கும் விஜயம்செய்யவிருக்கிறார். (உ)

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர்

## பன்சிலாலுக்குசொந்தமான ரூ.10லட்சம்பொருட்கள்மீட்பு

புதுடில்லி, ஆக. 1

இந்திய முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் பன்சிலாலுக்குச் சொந்தமானதென்று கருதப்படும் 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தெற்கு டில்லியில் உள்ள பன்சிலாலின் நெருங்கிய உறவினர் ஒருவரின் வாடகை இல்லத்திலிருந்து இப்பொருட்களை ஹரியாணா பொலிஸார் கைப்பற்றினர்.

விலை உயர்ந்த நகைகள், வெளிநாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட ஒலிப்பதிவு நாடாப் பெட்டிகள், கைக்கடிகாரங்கள், மின் அணு சாதனங்கள் ஆகியவையே கைப்பற்றப்பட்ட பொருட்களாகும்.

## லிபிய எகிப்து யுத்தத்தில் ரஷ்ய தலையீடு

### அதிபர் சதாத் குற்றச்சாட்டு

கெய்ரோ, ஆக. 1

அண்மையில் நடைபெற்ற எகிப்து-லிபிய யுத்தத்தில் சோவியத்யூனியன் லிபியாவுக்கு ஆதரவாக தலையிட்டதாக எகிப்திய அதிபர் சதாத் குற்றம் சா[illegible]யுள்ளார்

டெலிவிஷனு[illegible] அளித்த பேட்டி ஒன்றிலேயே ஜனப் சதாத் இவ்வாறு குற்றம் சாட்டினர்.

தமது ஆட்சேபத்தை தாம் சோவியத்யூனியனுக்குத் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்

போர்க்காலத்தில்எகிப்துக்கு அண்மையிலுள்ள கடலில் சோவியத் விமானந்தாங்கிக் கப்பலொன்று நிலைகொண்டிருந்ததாகவும் அதிலிருந்து பறப்பட்ட ஹெலிகாப்டர் விமானங்கள் எகிப்தின் ராடரில் பலதடவை குறுக்கிடு செய்ததாகவும் அதிபர் ஜனப் சதாத தெரிவித்துள்ளார். (இ)

## சென்னை சிறைச்சாலை இம்சை:

## கமிஷன் முன்னிலையில் சிறை அதிகாரி தடுமாற்றம்

சென்னை, ஆக. 1

"கமிஷனுடன் விளையாடாதீர்கள். இங்கிருந்து தப்பமுடியாது. உண்மையை மறைக்காமல் கூறும்" எனசிறைஅதிகாரி வித்யாசாகருக்கு நீதிபதி எம். எம். இஸ்மாயில் எச்சரித்தார்.

அவசரகால நிலையின்போது சென்னை சிறைச்சாலைகளில் மிஸா கைதிகள் இம்சிக்கப்பட்டதாகக் கூறப்படும் புகார்மீது விசாரணை நடைபெற்ற சமயம் சிறை அதிகாரி பதில் சொல்லத் தயங்கியபோதே நீதிபதி எம். எம். இஸ்மாயில் எச்சரிக்கை விடுத்தார்.

மத்திய அரசினல் மிஸா கைதிகளை ஆஸ்பத்திரியில் அனுமதிப்பதற்கான கடிதத்தை, சிறை அதிகாரிகள் திட்டமிட்டு, இல்லாமல் செய்தலராவென தி. மு. க. வழக்கறிஞர் திரு. டி. பி இராதா கிருஷ்ணன் விசாரணை செய்த போதே சிறை அதிகாரி தடுமாறினர். (கெ-இ)

## பிரிவுபசாரம்

பண்டத்தரிப்பு, திங்கள்

"மேற்குஜெர்மனியிலும்மற்றும் வெளிநாடுகளிலும் நடைபெற்ற பொருட்காட்சி சாலைகளில் எங்கள் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் தயாரிக்கப்பட்ட உடைகள் சிறந்த வரவேற்பையும் பாராட்டையும் பெறுவதற்குக் காரணமாக இருந்தவர் திரு. டாஸ் அவர் பிரிந்து செல்வது எமக்குப் பெரும் இழப்பாகும்" என்று பண்டத்தரிப்புப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் உடை தயாரிப்பு முகாமையாளராகக் கடமையாற்றிய திரு. வி வி. கே. டாசுக்கு மேற்படி சங்கத்தினரால் அளிக்கப்பட்ட பிரிவு உபசார விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் சங்கப் பொதுமுகாமையாளர் திரு. இ. இராசசுந்தரம் குறிப்பிட்டார்.

திரு வி. சிற்றம்பலம், செல்வி கமலாதேவி உட்பட பலர் இவ்விழாவில் உரையாற்றினர்கள். (அ)

## மாணவர் தாக்குதல்: கமிஷன்விசாரணைவேண்டும்

### கருணாநிதி அரசிடம் கோரிக்கை

சென்னை, ஆக. 1

கருணாநிதியின் சிலைக்கு மாலை அணிவிக்கச் சென்ற மாணவ, மாணவிகளை பொலிசார் மிருகத்தனமாக தாக்கியது குறித்து விசாரணைக் கமிஷன் நியமிக்கவேண்டுமென தி மு க தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான கலைஞர் மு கருணாநிதி சட்டப்பேரவையில் வேண்டுகோள் விடுத்தார்

சென்றமாதம் நடைபெற்ற மாணவர்தாக்குதலால் ஜானகிராமன், அசோக்குமார், பஷீர் இந்தியாஸ், இராமசாமி, நந்தவனம் ஆகியோர்தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர்.

மாணவர்கள் அணி பாடசாலைத் தேர்தலில் தி. மு. க. வெற்றியொகை சூடியதையடுத்து ஊர்வலமாக வந்து அண்ணா சிலைக்கும், கர்மவீரர் காமராஜர் சிலைக்கும் மாலை அணிவித்துவிட்டு கலைஞர் கருணாநிதியின் சிலைக்கு மாலை அணிவிக்கச் சென்ற சமயம் பொலிசார் மாணவர்களைத் தடுத்து ஊர்வல நனைதக்கலைந்து தாக்கினரென்றும் சென்னை பாலஸ் ஓட்டலுக்கு முன்னால் நின்ற இளைஞர்களையும் சுரங்கபாதைகளில் சிதறி ஓடிய இளைஞர்களையும் தாக்கியதால் பலர் காயமுற்றனரென்றும் திரு. கருணாநிதி தெரிவித்தார். (கெ-இ)

## படகு விபத்து: 64 பேர் நீரில் மூழ்கினர்

புதுடில்லி, ஆக. 1

மேற்கு வங்காளத்தில் உள்ள ஆறு ஒன்றில் 80 பேர் பிரயாணம் செய்த படகு ஒன்று கவிழ்ந்ததில் 64 பேர் நீரில் மூழ்கினர் என அறிவிக்கப்படுகிறது.

16 பேர் உயிர் தப்பினர் மீட்கப்பட்டனர் (இ)

## குறைந்த கட்டணமாக 10 சதம் அறவிடலாம்

### இ. போ. சபைக்கு குழு சிபார்சு

கொழும்பு, திங்கள்

பஸ் கட்டணங்களைக் குறைந்த, தூரச் சேவைகளுக்கு 20 சதத்திலிருந்து 10 சதமாகவும், 25 சதத்திலிருந்து 20 சதமாகவும் குறைக்குமாறு இலங்கைப் போக்குவரத்துச் சபை நியமித்த விசாரணைக் குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபை முன்னர் பஸ் கட்டணங்கள் பற்றி விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட இக்குழு, விசாரணையின் பின்னர் மேற்படி சிபார்சைக் குறிப்பிட்டு இவ்வறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

இக்குழு, டவுஸ்களில் மேலதிகமாகப் பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்குக் கண்டனம் தெரிவித்துள்ளது.

பண்டத்தரிப்பு, திங்கள்

சாந்தை விநாயகர் கிராம முன்னேற்றச் சங்கத்தின் இரண்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சாந்தையிலுள்ள தாயகம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புதுவருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும் (அ)

# "புற்றுநோயாளர் சஞ்சலம்தீர்ப்பதில் யாழ். ரோட்டறிச் சங்கத்தின் பணி"

## அரசாங்க அதிபர் பாராட்டு

யாழ்ப்பாணம், செவ். "யாழ்ப்பாணத்தில் புற்று நோய்ச் சிகிச்சை நிலையம் இல்லாததினால் யாழ். மக்கள் பெரும் கஷ்டத்தை அனுபவிக்கின்றார்கள். பெருந்தொகையான பணத்தை செலவுசெய்து கொழும்புசென்று புற்றுநோய் சிகிச்சைபெற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை யாழ். மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதை நிவர்த்திசெய்வதற்காகவே யாழ் ரோட்டறி கழகத்தினர் களியாட்டு விழாவை நடத்துவது பாராட்டுக்குரியது."

இவ்வாறு சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ரோட்டறிக் கழகத்தின் களியாட்டு விழாவை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்த யாழ். அரசாங்க அதிபர் டபிள்யூ. ஏ. எல். விஜயபால பேசுகையில் கூறினார்.

யாழ். மேற்றிராணியர் தியோகுப்பிள்ளை பேசுகையில், பல்வேறு சமூகசேவைகளை செய்துவரும் ரோட்டறிக் கழகத்தினர் யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் சிகிச்சைநிலையத்தை நிறுவுவதற்கு முன்வந்துள்ளமை ஒரு போற்றத்தக்க விஷயமாகும். இக் கழகம் யாழ். மக்களின் கஷ்டங்களை அறிந்து சேவையாற்றுவதற்கு முன்னிற்கும். அப்படியான இக் கழகங்களுக்கு வளர்ச்சியை ஏற்படுத்த நாமெல்லோரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றார்.

யாழ். ரோட்டறிச் சங்கத் தலைவர் திரு. எஸ். குணரட்ணம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

இவ் விழாவில் கலை நிகழ்ச்சிகளும் மற்றும் சாகச விளையாட்டு நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. (கு-உ)

## புதன்கிழமை ஆரம்பம்

வேலணை, திங்கள் ஊர்காவற்றுறை-கரம்பனில் இருக்கும் குருமடத்தின் வருடாந்த கொடியேற்ற விழா இம்மாதம் 3ம் திகதி புதன்கிழமை காலை ஆரம்பமாக இருக்கின்றது. (உ)

## சிலை நிறுவ முயற்சி

வேலணை, திங்கள் முன்னாள் எம். பி. அமரர் வி. ஏ. கந்தையாவுக்கு சிலை நிறுவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிதி சேகரித்து சிலை நிறுவும் முயற்சியில் ஊர் மக்கள் ஈடுபட்டுள்ளனர். (உ)

## திறக்கப்படும்

வேலணை, திங்கள் ஊர்காவற்றுறைத் தொகுதி அபிவிருத்திச் சபையின் மத்திய செயலகம் இம்மாதம் 9ந் திகதி காவலூர் தேசிய அரசப் பேரவை உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினத்தால் திறந்துவைக்கப்படவிருப்பதாக முக்கிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (அ)

## சமய அறிவுப் போட்டி

வேலணை, திங்கள் வேலணைபெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவிலின் வருடாந்த உற்சவத்தையொட்டி ஆண்டுதோறும் நடாத்தப்பட்டுவரும் சமய அறிவுப் போட்டியை இவ்வருடமும் நடாத்த வேலணை இந்து வளர்ச்சிக்கழகமும், வேலணை இந்து இளைஞர் மன்றமும் முன்வந்திருக்கின்றன. (அ)

## பண்டத்தரிப்பு கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள்

பண்டத்தரிப்பு, திங்கள் பண்டத்தரிப்புப்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாக அதிகாரியாக சண்டிலிப்பாய் வலி.தென் மேற்குப் பிரிவுஉதவிஅரசாங்க அதிபர் திரு.கி.கோபாலரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார். ஏனைய நிர்வாக இயக்குநர்களாக தலைமைக் காரியாலயப் பரிசோதகர் திரு.என்.சந்திரசேகரம், கூட்டுறவுப் பரிசோதகர்திரு. எஸ். இ.யோசவ் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

## "இலட்சியத்தில்வெற்றிபெற ஆட்சிமன்றத்தை பயன்படுத்துவோம்"

— காவலூர் எம். பி.

யாழ்ப்பாணம், செவ் "தமிழர் விடுதலைக்கூட்டணியின் இறுதி இலட்சியம் தனித்தமிழ்நாடு. இதில் எந்த மாற்றமுமில்லை. மக்கள் நாம் பிரிந்து செல்வதற்கு உறுதியான கொள்கையுடன் வாக்களித்துள்ளார்கள். தமிழ்ப்பிரதேசங்களில் வாழும் 57 வீதமான மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களித்து சுதந்திரவேகத்தை உலகறியச் செய்துவிட்டனர். அவர்களது முழு ஆதரவையும் விடுதலைக் கூட்டணி இலட்சிய வெற்றிக்கு பயன்படுத்தும்" என்று கரம்பொன் மக்களுக்கு நன்றிதெரிவித்து நடந்த கருத்தரங்கில் பேசுகையில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் "எமது கொள்கையை வென்றெடுப்பதற்காக நாம் ஆட்சிமன்ற ஆசனங்களைப் பயன்படுத்தவுள்ளோம். சலுகைகளைப் பெறுவோமென்றே நாம் ஆட்சிமன்றம் செல்லவில்லை. எதிர்கால தமிழ்ச் சந்ததிசுய நிர்ணய உரிமையுடன் இந்த நாட்டில்வாழ தமிழனுக்கு ஓர் நாடுஅவசியம். அதற்கான இலட்சியப் பணிக்கு எம்மை அர்ப்பணிப்போம்.

"இன்றுநாம் எதிர்நோக்கும் நெருக்கடியில் எமது இன ஒற்றுமை குலையக் கூடாது. கட்சி பூசல்களை மறந்து ஓர் இனம் சுதந்திரம் பெறும்வரை ஓயாமல், எமது சிந்தனையை வளம்படுத்த வேண்டும். இனத்தின் ஒற்றுமையில் தான் எமது சுதந்திரம் தங்கியுள்ளது. எனவே தேர்தல் சிந்தனைகளை மறந்து பகைமையை விலக்கி ஓரணியில் இனவிடுதலை காண்போம்" என்றார்.

கருத்தரங்கில் இளைஞர் பேரவையினரும் விடுதலைக் கூட்டணி பிரமுகர்களும் உரையாற்றினர். (கெ-உ)

## "பாடசாலைகள் வாழ்வுடன் இணைந்ததாக மிளிரவேண்டும்"

— வட மாநிலக்கல்வியதிபதி

பண்டத்தரிப்பு, திங்கள் "சமயமும், சமூகமும், பாடசாலையும் ஒருங்கிணைந்தே செயல்பட வேண்டும். பாடசாலை என்பது ஒரு தனியான நிறுவனமாக விளங்காமல் அந்தப் பகுதியிலுள்ள மக்களின் வாழ்க்கையோடு ஒன்றுபட்ட ஒரு நிறுவனமாக மிளிரவேண்டும். சமயக்கல்வியே பாடசாலைகளையும் கழகங்களையும் ஒன்றிணைக்கும் சாதனமாக இருந்து வருகின்றது. இது தொடர்பாக கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தினர் மேற்கொண்டுவரும் பணிகளைப் பாராட்டுகிறேன்".

மேற்கண்டவாறு கத்தோலிக்க ஆசிரியர்சங்க இளவாலைக் கிளையினரால் பண்டத்தரிப்பு ஞான ஒடுக்க நிலையத்தில் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் வடமாநில வித்தியாதிபதி திரு.கே. சிவநாதன் குறிப்பிட்டார். வித்துவான் ச. அடைக்கலமுத்து தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் மறைக்கல்வி இயக்குநர் அருட்திரு. சௌந்தரநாயகம் அடிகள், அருட்திரு. பொன்னையா அடிகள் ஆகியோரும் கருத்துரை வழங்கினார்கள்.

கத்தோலிக்க ஆசிரியர் சங்க இளவாலைக் கிளையின் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. அலோரன்ஸ், உப தலைவர்கள்: திரு. எஸ். ஆனந்தராசா, திருமதி அருளானந்தம், செயலாளர்: திரு. சாமுவேல்பெனடிக்ற், பொருளாளர்: செல்வி ஏ.கிளாரம்மா. உறுப்பினர் நால்வர் தெரிவுசெய்யப்பட்டனர். (அ)

## கதிர்காமத்தில் அமிர்-சிவா வெற்றிக்காக அன்னதானம்

கதிர்காமம், திங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணி செயல் அதிபர்கள் தலைவர்கள் மு சிவசிதம்பரம், அ. அமிர்தலிங்கம் ஆகியோர் மிக அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றதை ஒட்டி கதிர்காமம் பொன்னம்பலசாமி மடத்தில் விசேட அன்னதானம் வழங்கப்பட்டது.

இதையொட்டி மடத்தில் விசேட பூசையும் நடைபெற்றுள்ளது. (இ)

முன்னாள் பிரதமரின் மகள்

# ஜனவசகமிஷனில் இருந்து ராஜினாமா

கொழும்பு, திங்கள் ஜனவச கமிஷனின் தலைவியான செல்வி சந்திரிகா பண்டாரநாயக்கா தமது தலைமைப் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

தமது ராஜினாமா அறிவித்தலை அவர் காணி அமைச்சர் திரு.ஈ.எல். சேனநாயகாவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

செல்வி பண்டாரநாயகா முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவின் புதல்வி என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## வங்கிக்கிளை நிறுவ கோரிக்கை

பண்டத்தரிப்பு, திங்கள் பண்டத்தரிப்புப் பட்டணசபைப்பகுதியில் மக்கள் வங்கி, இலங்கைவங்கி ஆகிய வங்கிகளின் கிளை நிறுவனங்கள் எதுவும் இல்லாததால் இப்பகுதியிலுள்ளபொது மக்களும், வர்த்தக ஸ்தாபனங்களும் மிகவும் கஷ்டமடைகின்றனர்.

பண்டத்தரிப்புப் பகுதியிலுள்ள மக்கள் தங்கள் வங்கி சம்பந்தப்பட்ட அலுவல்களுக்காக இப்போது சங்கானையிலுள்ள மக்கள் வங்கிக்கிளைக்கு, அல்லது தொல்புரத்திலுள்ள இலங்கை வங்கிக் கிளைக்குச் செல்ல வேண்டியிருப்பதாகவும் இதனால் பல்வேறு சிரமங்களையடைவதாகவும் கவலையடைகின்றனர். முக்கிய பட்டினமாக வளர்ந்துவரும் பண்டத்தரிப்புப் பட்டணப் பகுதியில் விரைவில் மக்கள் வங்கியின் கிளை அல்லது இலங்கை வங்கியின் கிளை ஒன்று நிறுவப்பட வேண்டும்என்றுபண்டதரிப்புப் பகுதியிலுள்ள பல பொது நிறுவனங்களும், மற்றும் ஸ்தாபனங்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதுபற்றி நடவடிக்கை மேற்கொண்டு ஆவனசெய்து தருமாறு வட்டுக்கோட்டைத் தொகுதிதேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசுவையும் வேண்டியுள்ளனர். (அ)

## பி. எஸ். ஆறுமுகம் சகோதரருக்கு யாழ். நகரில் பொன்விழா

யாழ்ப்பாணம், செவ். லவிதஸ் வரநாதபூபதி, நாதஸ்வரவித்துவான் யாழ்ப்பாணம் பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை, தவில் வித்துவான் லயஞானபூபதி பி. எஸ். ராஜகோபால்பிள்ளை ஆகியோர் இசையுலகத்திற்குச் செய்த சேவையைப் பாராட்டுமுகமாகப் பொன் விழாவும் சேவைநலம் பாராட்டு விழாவும் எதிர்வரும் 5ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் வண்ணை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய மண்டபத்தில் இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாக இந்துமத நாகரிகத்துறை பீடாதிபதி பேராசிரியர் டாக்டர் பிரமஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழாவின் நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ பரமாசார்யஸ்வாமிகள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவார்.

தொடர்ந்து விழாத் தலைவர் தலைமையுரை நிகழ்த்துவார். தொழிலதிபர் கலாரசிகமணி எஸ். தியாகராஜா யாழ். நகரப் பெருமக்கள் சார்பாகக் கலைஞர்களுக்குப் பொன்னாடை போர்த்தியும், பட்டமளித்தும், பொற்கிழி வழங்கியும் கௌரவிப்பார். நாதஸ்வரவித்துவான் என். கே. பத்மநாதனின் நாதஸ்வரக் கச்சேரியும், தவில் வித்துவான் வலங்கைமான் ஏ. சண்முகசுந்தரத்தின் தவில் கச்சேரியும் விழாவில் இடம் பெறும். (கா-அ)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு. 13759

1. பொன்னையா தயாபரனும்
2. பெண் ஜெயவதியும் இருவரும்
அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை.

வழக்காளிகள்

எதிராக

(i) தியாகராசா சண்முகராசா, முருங்கன் தற்போது தேனீர்க்கடை, பாசையூர்.
(ii) சதானந்தன் W W/of கார்த்திகேசு கந்தையா அல்லது தியாகராசா பரியாரிகடை, முருங்கன்.
(iii) சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம், ஈச்சமோட்டை, சுண்டிக்குளி.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 13759-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1977-ம் வருஷம் ஆவணி மாதம் 31-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 15,600/-ம், 9-4-1973 தொடக்கம் 9-6-1975 வரைக்கும் ரூபாய் 11000/-க்கு 12 வீத வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 1,100/94.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணப் பகுதியும், பிரிவும் சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை.

"ஆயக்காறன் சுடலை, ஆரியநாச்சிபுலமும், வண்ணார் தோட்டமும் 1967-ம் ஆண்டு ஆனி மாதம் 15-ந் திகதி பி. ஏ. சேனுதிராஜா உலாந்தாவால் வரையப்பட்ட படத்தின் படி தி ப. 4ம் குளி 1ம் இதற்கு எல்லை கிழக்கு கந்தையா கனகரத்தினத்தின் ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு விதானை ரோட்டு, தெற்கு ஜி. ஏ. அலோசியஸ் ஆத்த நெவின்ஸனும் பெண்ராணிஜெனீவீஸ்க்கும் உரிய மிகுதி ஆதனம்.

மூ. நவரத்தினராசா,
யாழ். மாவட்ட கோட்டு
விற்பனவு ஆணையாளர்.

"கமலபதி",
ஆஸ்பத்திரி வீதி,
பண்டைதீவு.

6252

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - பத்மினி
நான் வணங்கும் தெய்வம்

நாகம்ஸ்
(நன்னகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 3-30
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
தனிப்பிறவி

86-வது நாள்
ராணி (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா
(இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

மகத்தான 2-வது மாதம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மபிரியா
முத்துராமன் - சகுந்தலா
நடித்த
ஸ்ரீதரின் வைரநெஞ்சம்
(ஈஸ்ட்மன் கலர்)

RIO (Jaffna) Now Showing
Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
ACTION THRILL
in
DARING DOZEN

கடைசிவாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
சிவராம், கீதாஞ்சலி,
தர்மலிங்கம், ஸ்ரீதேவி
தினசரி 4 காட்சிகள் நடித்த
ஜெயேந்திரா மூவீஸ்
காத்திருப்பேன் உனக்காக

கடைசி வாரம்
ராஜா (யாழ்நகர்)
85-வது தினம்
தினசரி 4 காட்சிகள்
போன்: 7180
தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

சாந்தி யாழ். நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
முத்துராமன் - சௌகார்ஜனகி - நாகேஷ்
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் சுப தினம்

வெலிங்டன் [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ (யாழ். நகர்) போன்: 7693
தினசரி 10-30, 3-30, 6-30, 9-45
ஜெய்சங்கர் — சுஜாதா
நீ ஒரு மகாராணி

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30,
மாலை 6-30, இரவு 9-45
எம். ஜி. ஆர்.-லதா - நாகேஷ் அறிமுகம் பவானி
தங்கவேலு தேங்காய்சீனிவாசன்
நடித்த
கே. சி. பிலிம்ஸ் அளிக்கும்
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)


## உடுப்பிட்டி வாக்காளருக்கு பாராட்டு

பண்டத்தரிப்பு, திங்கள்

''ஈழத்தமிழினத்தின் விடுதலை வரலாற்றில் உடுப்பிட்டித் தொகுதி மக்களின் தீர்ப்பு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தொன்றாகும். தந்தை செல்வா விட்டுச்சென்ற தமிழ்ஈழஇலட்சியத்தை வென்றடைவதற்குத் தமிழ்மக்கள் ஓரணியில் எவ்வித வேறுபாடுகளுமின்றி கூட்டணியில் இணைந்துவிட்டார்கள் ஒன்பதை உடுப்பிட்டித் தொகுதித்தேர்தல் முடிவுஎடுத்துக் காட்டியுள்ளது. இதற்குக் காரணமான உடுப்பிட்டித் தொகுதி வாக்காளப்பெருமக்களுக்கும், உடுப்பிட்டித்தொகுதி முன்னாள் எம். பி. திரு ஜெயக்கொடி, திரு. செ.சந்திரகாசன் ஆகியோருக்கும் நன்றியும் பாராட்டும் உரித்தாகும்''

இவ்வாறு மாதகல் காந்திஜி சனசமூக நிலையத்தலைவர் திரு. ம. நவரத்தினம், செயலாளர் திரு. மு.பாலசிங்கம்ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்கள். [அ]

## கொழும்பில் 'யோகேஸ்' உரையாற்றுவார்

கொழும்பு, திங்கள்

தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்புக்கிளையினரின் கருத்தரங்கொன்று கிளைத்தலைவர் திரு. ஈழவேந்தன் தலைமையில் இம்மாதம் 3ந் திகதி புதன் கிழமை கொழும்பு லொறிஸ் வீதியிலுள்ள 51ம் இலக்க இல்லத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கருத்தரங்கில் மன்னார் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. சூசைதாஸனும், யாழ்ப்பாணம் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரனும் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பெருக்காற்றுவார்கள். (கா-இ)

## உற்சவம்

வேலணை, திங்கள்

வேலணை தெற்கு துறையூர் சிவ சுப்பிரமணியசுவாமி கோவில் கதிர்காம தீர்த்தோற்சவ விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. இரவு நிகழ்ச்சியாக 'வெடியரசன்' என்னும் வரலாற்று நாடகமும் அடுத்தநாள் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 4 மணியளவில் தீக்குளிப்பு வைபவமும் இடம்பெற்றன.

வேலணை இந்து இளைஞர் மன்றத்தினரும் வேலணை இந்து வளர்ச்சிக் கழகத்தினரும் இணைந்து சுந்தரமூர்த்திநாயனாரின் குருபூசை தினத்தை மிக விமரிசையாகக்கொண்டாடினர். (அ)


வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி, சரோஜாதேவி
தாமரை நெஞ்சம>


## 98 புதிய முகங்கள்!

கொழும்பு, திங்

தேசிய அரசுப்பேரவை இம்மாதம் 4ம் தேதி கூடும்போது பேரவையில் 98 புதியமுகங்கள் இருப்பார்கள்.

168 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய அரசுபேரவையில் அரைவாசிக்கு மேற்பட்டோர் புதியவர்களாகும்

புதிய உறுப்பினர்களில் ஐக்கிய தேசியக்கட்சியைச்சேர்ந்தவர்கள் 88 பேர்களாகும். தமிழர் விடுதலைக் கூட்டணியில் புதியவர்கள் 6 பேர்களாகும். சுதந்திரக்கட்சியில் நால்வர் புதியவர்களாகும்.

இரண்டாவது தேசிய அரசுப் பேரவையில், 1947ம் ஆண்டு முதல் தொடர்ந்து உறுப்பினராக இடம் பெற்றுள்ளவர், மதவாச்சி எம். பி மைத்திரிபால சேனநாயக்காவாகும்

தேசிய அரசுப் பேரவையில், வயது குறைந்த உறுப்பினர் 19 வயதான திரு. அனுராடானியலாகும்.


## பதவி வெற்றிடம்

முத்து ஐயன் கட்டு ப. நோ. கூ. சங்கத்தின் பொது முகாமையாளர் தரம் III பதவிக்கு பின்வரும் தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பங்கள் 15-8-77-ந் திகதிக்கு முன் தலைவர், முத்து ஐயன் கட்டு ப. நோ. கூ. சங்கம், ஒட்டுசுட்டான் என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும்.

### தகைமைகள்

1. வயது 25—40 (சங்கப் பணிப்பாளர்களுக்குவயதெல்லை கவனிக்கப்படமாட்டாது)
2. வதிவிடம் வவுனியா மாவட்டத்தில் வதிவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. கல்வித்தகைமை பின்வருவனவற்றில் ஒன்று
   (i) கூட்டுறவுப்பயிற்சி பெற்ற பட்டதாரி
   (ii) 3 வருட அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர்தர தராதரப் பத்திரம்
   (iii) 5 வருடகால அனுபவம் பொருந்திய முன்னைநாட் கூட்டுறவுப் பரிசோதகர்
   iv) ரூபா 20,00,000/- இனை வருடாந்த மொத்த விற்பனவாகக் கொண்ட வியாபாரத் தாபனமொன்றின் மேல் முகாமைப் பதவியொன்றில் 3வருட அனுபவமுடைய ஒருவர்.

   340 — 590
4. சம்பளம் ———— 15×10, 20×5

இதனுடன் படிகளும் வழங்கப்படும்.

தலைவர்,
முத்து ஐயன் கட்டு
ப. நோ. கூ. சங்கம்,
ஒட்டுசுட்டான்.
6726



REGAL (JAFFNA) 2-nd WEEK
Daily: at 4-45, 7-00 & 9-30 p.m
NORMAN WISDOM IN
"ON THE BEAT"
FULL COMEDY

4-8-77
Christian Fechner the Creator of the "Crazyboys" now Presents his Most Hilarious Comedy to Date!
PIERRE RICHARD JANE BIRKIN
in
Claudezidis
"THE GOOSE CHASE"
Color



## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

5 அந்தர் லேட்டஸ்ட் அவெறி தராசு விற்பனைக்கு இருக்கிறது. ஸ்ரீ கிருஷ்ண ரேட்ஸ், 92, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 6735

### கோட்டு விற்பனவு விளம்பரம்

M. B. 12308

அருணாசலம் பதஞ்சலிநாதன்

கந்தர்மடம், யாழ்ப்பாணம். — வழக்காளி

எதிராக

கதிரேசு குமரையா,

மயிலப்புலம், திண்ணைவேலி தெற்கு, யாழ்ப்பாணம். — எதிரி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில் இல. M. B 12308 வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1977-ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 18-ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் [18-8-77] என்னால் விற்கப்படும்.

#### தீர்வைத் தொகை

ரூபா 14,078/- பின் 14-2-71 தொடக்கம் 16-12-71 வரைக்கும் ரூபா 10,000/-க்கு 11 வீத வட்டியும் பின் முழுத்தொகைக்கும் இறுபடும் வரையும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 549 சதம் 59 இதில் விற்பனவில் ஒருமித்து ரூபா 11, 750/- கழித்து மிகுதித் தொகையில்.

#### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் நல்லூர்கோவில் பற்று திண்ணவேலி இறைமக்கனை புலம் ப தீ. 18-ம் குழி 13 இது லைசன்சேவையர் J.D. வீரசிங்கத்தால் இல. 13669-ல் 9-9-37-ல் தயாரிக்கப்பட்ட பிளானுக்கு அமைவாக உள்ளது. இதற்கு எல்லை கிழக்கு முருகேசு சிவக்கொழுந்துவுக்கும் பங்காளருக்கும் சின்னையா நடராசாவுக்கும் உரிய ஆதனங்கள். வடக்கு கார்த்திகேசு தில்லையம்பலத்திற்கும், வைத்தியர் இளையப்பாவிற்கும் உரிய ஆசனம். மேற்கு ஆறுமுகம் இராமநாதனுக்குரிய ஆதனம். தெற்கு ஒழுங்கையும் ஆறுமுகம் இராமநாதனுக்குரிய கை ஒழுங்கையும் புதிதாகக் கட்டப்பட்ட வீடும் பயிர்வகைகளும் அதை சேர்ந்தவைகளும் கிணற்றில் பங்கும் இதனடங்கலும்.

சி. செ. மாரிமுத்து
நீதிமன்றங்களின் விற்பனவு ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

'விதானைவளவு'
சித்தங்கேணி,
5-7-77. 6753


## நல்லொழுக்—

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை வேளுகி, பிரச்னைகள் அதிகரித்துவிட்டது.

பிரிட்டிஷார் போன்று சிங்கள அரசாங்கமும், தமிழ் மக்களிடம், தமிழ்ப் பிரதேசங்களையும், நிர்வாகத்தையும் கண்ணியத்துடன் சமாதான முறையில், எல்லாருக்கும் நன்மையளிக்கும் விதத்தில் ஒப்படைக்கவேண்டும்

பிரிட்டிஷாரின் நீதி நியாயத்திற்கு, சிங்களவரின் நீதி நியாயம் சமமானதாக இருக்க வேண்டும்.

பி இராஜரத்தினம்,
சட்டத்தரணி.
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
EELANADU

# சகோதரியுடன் மனஸ்தாபம்: யுவதி தற்கொலை

பண்டத்தரிப்பு, திங்கள் நள்ளிரவு நேரத்தில் நித்திரைக்குப்போன தனது பருவ மகளைக் காணாது தேடியதாய் தமது வீட்டு வளவிலுள்ள முருங்கை மரத்தில் தூக்குப் போட்டுப் பிணமாக அவர் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டுஅதிர்ச்சியடைந்தாராம். சில்லாலை தெற்கைச் சேர்ந்த கந்தசாமி லலிதமலர் என்ற 22 வயது இளம் பெண்ணின் மரணம் தொடர்பாக பண்டத்தரிப்புப் பகுதித் திடீர் மரண விசாரணை அதிகாரி வைத்திய கலாநிதி ஏ. அல்போன்ஸ் அத்தனுசியார் ஸ்தலத்தில் வைத்து விசாரணை நடத்திய போது இறந்த யுவதியின் தாயார் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இறந்தவரின் தாயாரான இரத்தினேஸ்வரி என்பவர் தமது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:

'பண்டத்தரிப்புப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கைத்தறி நெசவுசாலையில் வேலைசெய்துவந்த எனது மகள் சம்பவதினம் இரவு 9 30 மணியளவில் உணவு அருந்தினர் அப்போது காலமானவருக்கும் அவரது சகோதரிக்கும் சிறுவாக்குவாதம் ஏற்பட்டது. தமது சகோதரியை ஏசியபடி நித்திரைக்குச் சென்ற அவரை நள்ளிரவில் நான் எழுந்து சென்று பார்த்த போது அங்கு காணாததால் எல்லா இடமும் தேடிப்பார்த்தேன். கடைசியாக எங்கள் வளவிலுள்ள முருங்கை மரமொன்றில் அவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தொங்கிய நிலையில் கண்டு குழறினேன்'

இறந்தவரின் தந்தை, சகோதரி, ஆகியோரின் சாட்சியத்தையடுத்து பிரேத பரிசோதனை நடத்துமாறு மரண விசாரணை அதிகாரி உத்தரவிட்டார்.

பிரேதபரிசோதனை நடத்திய சங்கானை மாவட்ட வைத்திய அதிகாரி செல்வி ஆர். ஈ. திருச்செல்வம் கழுத்தில் கயிறு சுருக்கப்பட்டதனல் மூச்சுத் திணறலால் ஏற்பட்ட மரணம் என்று தெரிவித்ததைத் தொடர்ந்து தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ)

## 'அமிர்' நீடுவாழ

சித்தன்கேணி, திங்கள் காங்கேசன்துறை எம். பியும் தமிழர்விடுதலைக்கூட்டணி செயலதிபர்களில் ஒருவருமான திரு. ஏ. அமிர்தலிங்கம் நீண்டகாலம் வாழ்ந்து தமிழ் மக்களுக்கு தொடர்ந்து சேவை புரியவேண்டுமென்று பிரார்த்தித்து கலைநகர்மக்கள் வைரவர் ஆலயத்தில் விசேட பூஜை நடத்தினர். (உ)

## லயன்ஸ் கழக நாடகப்போட்டி முடிவு திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ். லயன்ஸ் கழகம் நடத்தும் தமிழ்-ஆங்கில நாடகப் போட்டி பல மன்றங்களும், கல்லூரி தலைவர்களும் கேட்டுக்கொண்டமையால் 15-8-77-ம் திகதி வரை நீடிக்கப்பட்டிருக்கின்றது.

இப்போட்டி கடந்த 31-ம் திகதியுடன் முடிவடைவதாக முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது. ......

## சூரியரின் ...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. ஆர். பிரேமதாசா தேசிய வீடமைப்பு ஆணையாளர் திரு எம். ஜி. டி ஜெயவர்த்தனவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

வீடமைப்பு அமைச்சுக்குச் சொந்தமான இக்காணித் துண்டு பம்பலப்பிட்டி ஷிரபரி கார்டின்ஸில் அமைந்துள்ளது.



வேலர்: என்னுடைய அண்ணருடைய மகள் வேல் விழா பாக்கப்போய் புக்கைகட்டிக்கொண்டு படுத்திருக்கிருளும்.

மயிலர்; ஏன் பொலிஸிட்டை கம்பாலை அடிவாங்கிப்போட்டாளே

வேலர்: இக்லை பெண்கள் பகுதிக்குள் அம்பிட்டு விலா எலும்பு முறிய நெரிபட்டுப்போளுளும்.

— சுந்தர்

## ஆசிரியர் கடிதம்:

# 'நல்லெண்ணத்துடன் தீர்வு காணவேண்டும்'

இந்தியாவிலும் இலங்கையிலும் அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தல்கள், மக்கள் பூரணமாக அரசியல் முதிர்ச்சியடைந்துள்ளார்கள் என்பதையும் எதிர்காலத்தில், ஆயுதப் படையினரின் உதவியுடன் சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்ட முடியாதென்பதையும் எங்கள் நாட்டைப் போன்ற ஜனநாயக நாடுகளில் அவசரகாலச் சட்டம் என்ற போர்வையில், மக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் நசுக்கமுடியாதென்பதையும் எடுத்துக் காட்டிவிட்டது.

அண்மையில் நடந்த தேர்தலில் பின்வரும் விஷயங்கள் வெளியாகியுள்ளன.

1. பெண் பிரதமர்கள் தங்கள் நாடுகளில் நிர்வாக தராசை சமமாக பாவிக்கத் தவறிவிட்டார்கள்.

2. சுயேட்சை வேட்பாளர்க்ள் கொள்கை இல்லாமையால் ஏமாற்றமடைந்தார்கள். இவர்கள் சந்தர்பவாதிகள் தேர்தலுக்கு பின் இவர்கள் எந்தக் கட்சியையும் சேரக்கூடும். எதிர்காலத்தில் சுயேட்சைகள் போட்டிக்கு நிற்காமல் இருப்பதற்கு இது ஒரு நல்ல பாடமாகும்

3. பேசுவது கம்யூனிசமும் செயலளவில் முதலாளித்துவத்தையும் பின்பற்றுபவராக இருக்கும் கொள்கையற்ற இடதுசாரிகள் சரியான நேர்மையான கொள்கையில்லாததினுல் கவலையடைய நேர்ந்தது.

நீண்டகால நாற்பது வருடங்களுக்கு மேற்பட்ட அரசியல் அனுபவம் முதிர்ந்த புதிய பிரதம மந்திரி அரசியல் ஞானி என்ற முறையில் இதுவரை காலமும் பெரும்பான்மையினரால் பல துன்பங்களுக்கு ஆளாக்கி வந்த தமிழ்பேசும் மக்களின் கஷ்டங்களை நியாயமான முறையில் அனுகி தீர்த்துவைப்பார் என எதிர்பார்க்கலாம்.

இலங்கையின் முழு பொருளாதார சுதந்திரத்தை அடைவதற்காக எடுக்கப்படும் ஐக்கியப்பட்ட முயற்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் நாட்டின் அரசியல் சுதந்திரத்தின் ஒவ்வொரு தடுப்பு மூலைகளிலும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை பிரதம மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அறிந்திருப்பார்.

நாங்கள் சகலவித வேறுபாடுகளையும் மறந்து பரஸ்பரம் நல்லெண்ணத்துடன் ஆளுவோர் ஆளப்படுவோர் என்ற நிலைமையை மறந்து நாட்டின் முக்கிய பிரச்னைக்கு விரைவான ஒரு தீர்வு காணவேண்டும். அதன் மூலம் நாங்கள் கீழத்தேசத்தில் நாகரீகமடைந்த மக்களாக வாழ்கின்ரும் என்று உலகநாடுகள் மதிப்போடு பார்க்கும் வகையில் நடந்து கொள்வோம்.

ஒருவர்மீது மற்றெருவர் ஆதிக்கம் செலுத்தாமல், பாகுபாடு காட்டாமல், நீதியாக ஆட்சி செலுத்துவார்கள் என்ற நம்பிக்கையில் பிரிட்டிஷார், ஆட்சியை சமாதான முறையில் கண்ணியத்துடன் சிங்கள-தமிழ் மக்களிடம் ஒப்படைத்துச் சென்றனர். ஆனல் அதிர்ஷ்டவசமாக

(5-ம் பக்கம் பார்க்க)

# தரப்படுத்தலை நீக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்பட்டு வந்த தரப்படுத்தல் என்ற கொடுமையை உடன் நீக்குமாறு கல்வி மந்திரியைக் கோருவது என்று நல்லூர் மாணவர் பேரவையினர் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பான தீர்மானம் ஒன்று பேரவையின் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அன்றைய தினம் செல்வன் என். ரி ஜெகன் தலைமையில் நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: செல்வன் நா. தே. ஜெகன் (அமைப்பாளர் தமிழ் மாணவர் பேரவை), உபதலைவர்: செல்வன் ந சுதர்சன் (கனகரத்தினம் ம. ம. வி), இணைச்செயலாளர்கள்: செல்வன் கி. பரிமளராஜா (கனகரத்தினம் ம. ம. வி), செல்வி சாந்தினி தேவநாயகம் (வேம்படி மகளிர் கல்லூரி), உபசெயலாளர்: செல்வன் க. சிங்கராஜா (கனகரத்தினம் ம. ம. வி), அந்தரங்கக் காரியதரிசி: செல்வி சுகந்தி தேவநாயகம் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), பொருளாளர்: செல்வன் எஸ். தவபாலன் (யாழ். இந்துக்கல்லூரி), பொருளாளர் கமிட்டி: செல்வன் சி. சந்திரமௌலீசன் (யாழ். இந்துக்கல்லூரி), செல்வன் ச. சிவகுமார் (யாழ். இந்துக் கல்லூரி), செல்வி வனஜா துரைரட்ணம், (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), செல்வி கமலாசினி கந்தையா (கனகரத்தினம் ம. ம. வி;

11 பேர் கொண்ட நிர்வாகக் குழு உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர். (கா)

# விவசாயப் படையை மீண்டும் அமைக்கவும்

## அரசிடம் ஊழியர்சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

முன்னுள் விவசாயப்படை வீரர்களைக் கொண்ட விவசாயப்படையை மீண்டும் அமைக்குமாறு முன்னுள் விவசாயப்படை ஊழியர் சங்கம் அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

முன்னுள் விவசாயப்படை ஊழியர் சங்க வடபிராந்திய அமைப்பாளர் திரு. என். விஸ்வநாதன் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்ற மேற்படி சங்க கூட்டத்தில் முன்னுள் விவசாயப்படை அமைப்பாளர் திரு. எச். ஆர். செனவிரத்ன ஊடாக தமது கோரிக்கையை அரசிடம் சமர்ப்பிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

பொருளாதாரக் கஷ்டங்களுக்கு உள்ளாகி இருக்கும் முன்னுள் விவசாயப்படை ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறு அரசைக்கோருவதென்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பின்வருவோர் சங்க நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். செயலாளர்: திரு. எஸ். கதிரவேலு, பொருளாளர்: திரு. எம் பி அருளம்பலம், கணக்குப் பரிசோதகர் திரு. எஸ். மயில்வாகனம், 5 பேர் கொண்ட நிர்வாகக்கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது.

பின்வருவோர் விவசாயப் படையின் தொகுதி அமைப்பாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

எஸ். மயில்வாகனம், எஸ் பாலசுப்பிரமணியம் (உடுப்பிட்டி), ஈ. திருநாவுக்கரசு (முல்லைத்தீவு), கே என் இராசையா, எம் ஜெகநாதன் (கிளிநொச்சி), கே. ஆறுமுகம், எம். தர்மராஜா (காங்கேசன் துறை), வி. நேசராஜா (நல்லூர்), ஏ. வலண்டைன் (ஊர்காவற்றுறை), எஸ். ஜெயச்சந்திரபோஸ், பி. டொமினிக் (கோப்பாய்), எம். லட்சுமிகாந்தன் (பருத்தித்துறை), பி. தம்பிராஜா, கே. சிதம்பரப்பிள்ளை (சாவகச்சேரி) (இ)

## வெற்றி தோல்வியில்லை

அரியாலை, திங்கள்

பரியோவான் கல்லூரி மாணவர் கோஷ்டிக்கும் பழைய மாணவர் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற 35 ஓவர் சிநேகபூர்வமான கிரிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதல் துடுப்பெடுத்தாடிய பழைய மாணவர் கோஷ்டி 7 விக்கெட்டுக்களை இழந்து 208 ஓட்டங்களை எடுத்துத் தனது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது மேற்படி கோஷ்டியின் சார்பில் துடுப்பெடுத்தாடிய திருவாளர்கள் சுரேந்திரா, அன்ட்ரூஸ்ஆகியோர்முறையே 100, 36 ஓட்டங்களைப் பெற்றனர்.

மாணவர் கோஷ்டி 31 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டியின் சார்பில் விளையாடியசெல்வன் ஜெபனேசன் 32 ஓட்டங்களையும், பௌசான் வெளியேருமால் 56 ஓட்டங்களையும் பெற்றனர். (அ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.